இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
ஆசிரியர் கல்வியில் முதுகலைமாணி - பகுதி I
இறுதிப் பரீட்சை - 2006
ESP 1263 - கலைத்திட்டமும் கற்றல் மதிப்பீடும்
காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

---

திகதி: 10.03.2006 நேரம்: பி.ப 1.00 - பி..ப 4.00

---

மூன்று(03) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.
ஒவ்வொரு விடையும் வெவ்வேறு புத்தகத்தில் எழுதப்படல் வேண்டும்.

1. (i) 'கலைத் திட்டம்' என்பதனால் நீங்கள் கருதுவது என்ன என்பதை விளக்குக.

(05 புள்ளிகள்)

(ii) இலங்கையின் ஆரம்ப அல்லது இடைநிலைப் பாடசாலைக் கலைத்திட்டத்தைத் தெரிவு செய்து இக்கலைத்திட்டத்தின் பிரதான அம்சங்களை எடுத்துக் காட்டுக.

(14 புள்ளிகள்)

(iii) தெரிவு செய்த கலைத்திட்டத்தினை விருத்திசெய்வதில் செல்வாக்குச் செலுத்திய தத்துவ, உளவியல், சமூகவியல் அடிப்படைகளை விளக்குக.

(14 புள்ளிகள்)

2. (i) கலைத்திட்ட விருத்திக்கான மூன்று மாதிரிகளின் பெயர்களைக் குறிப்பிட்டு அவை ஒவ்வொன்றினதும் பிரதான பண்புகளை விபரிக்க

(15 புள்ளிகள்)

(ii) உங்கள் நிறுவனத்தின் ஆசிரியர்கல்விக் கலைத்திட்டத்தில் இம் மாதிரிகளின் பிரதான பண்புகள் எத்துணை அளவிற்கு இடம்பெற்றுள்ளன என்பதை ஆராய்க.

(18 புள்ளிகள்)

3. "கலைத்திட்ட ஒழுங்கமைப்பு என்பது ஒரு கல்வி முறைமையின் அல்லது நிறுவனத்தின் கலைத்திட்டத்தில் உள்ளடக்கப்படும் அடிப்படை அம்சங்கள் எவ்வாறு ஒருங்கமைக்கப்பட்டு. ஒன்றிற்கொன்று தொடர்புபடுத்தப்பட்டு, வரிசைக்கிரமப் படுத்தப்பட்டுள்ளதென்பதைக் குறிப்பதாகும். இவ்வம்சங்களாவன கற்பித்தல் திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்கள், கற்றல் சாதனங்கள், உபகரணங்கள், கற்பித்தல் ஆளணியினரின் வாண்மை நிபுணத்துவம், கணிப்பீடு மற்றும் பரீட்சை அமைப்புகளின் தேவைகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன" - ஸ்கில்பெக் 1991

(i) மேற்குறிப்பிட்ட கூற்றின் அடிப்படையில் குறிப்பிட்டதொரு இலக்குக்குழுவிற்கு கலைத்திட்டம் ஒன்றினை ஒழுங்கமைக்கும் போது கலைத்திட்டத்தினை விருத்திசெய்பவர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைக் குறிப்பிடுக.

(8 புள்ளிகள்)

(ii) மேற்குறித்த பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு கலைத்திட்ட விருத்தியில் ஈடுபடுவருக்கு நீங்கள் எத்தகைய ஆலோசனை வழங்குவீர்?

(8 புள்ளிகள்)

(iii) உங்கள் ஆலோசனையின் அடிப்படையில் கலைத்திட்டம் ஒன்றினை ஒழுங்கமைக்கும் போது கருத்திற்கொள்ளக்கூடிய ஐந்து கோட்பாடுகளைப் பட்டியற்படுத்தி அவற்றை விளக்குக.

(17 புள்ளிகள்)

4. (i) அண்மைக் காலத்தில் இலங்கையில் மாற்றத்திற்குள்ளான ஆசிரியர் கல்வி கலைத்திட்டம் அல்லது பாடசாலைக் கல்விக் கலைத்திட்டம் ஒன்றினை அறிமுகம் செய்து, மேற்கொள்ளப்பட்ட பிரதான மாற்றங்களை எடுத்துக்காட்டுக.

(12 புள்ளிகள்)

(ii) இம் மாற்றத்திற்கு இட்டுச்சென்ற சந்தர்ப்ப சூழ்நிலைகளை விளக்குக.

(8 புள்ளிகள்)

(iii) மேற்படி கலைத்திட்டத்தினை மாற்றியபோது பின்பற்றப்பட்ட நடைமுறைகளை விளக்குக.

(13 புள்ளிகள்)

5. (i) 'ஆசிரியர் கல்வியில்' கலைத்திட்ட மதிப்பீட்டின் தேவைபற்றி விளக்குக.

(6 புள்ளிகள்)

(ii) கலைத்திட்ட மதிப்பீட்டு செயன்முறையின் போது பரிசீலனைக்குட் படுத்தப்படும் அம்சங்கள் எவை?

(6 புள்ளிகள்)

(iii) கலைத்திட்ட மதிப்பீட்டில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் கருவிகளையையும் நடைமுறைகளையும் விபரிக்க.

(15 புள்ளிகள்)

(iv) மேற்குறித்த கருவிகளையும் நடைமுறைகளையும் பயன்படுத்துவதில் நீங்கள் அவதானிக்கும் எவையேனும் குறைபாடுகளைத் தருக.

(6 புள்ளிகள்)

6. (i) விஞ்ஞான பாடத்தில் ஆறாம் வகுப்பு மாணவர்கள் 40 பேர் பெற்றுக்கொண்ட 10 - 100க்கும் இடையிலான புள்ளிகள் தொகுதியொன்றினைத் தயாரிக்க.

(5 புள்ளிகள்)

(ii) இவ்வகுப்பு மாணவர்களின் ஆற்றுகையைப்(Performance) பகுப்பாய்வு செய்யுமாறு நீங்கள் கேட்கப்பட்டுள்ளீர்கள்.

மாணவர்களின் ஆற்றுகையைப் பகுப்பாய்வு செய்ய நீங்கள் பிரயோகிக்கக்கூடிய புள்ளிவிபர நுட்பங்களைக் குறிப்பிட்டு, அவற்றை நீங்கள் எவ்வாறு பிரயோகிப்பீர்கள் எனக் காட்டுக.

(28 புள்ளிகள்)

(பதிப்புரிமையுடையது)